www.padippakam.com

மே 1999



எண்வழி இதழ் : 6

நன்கொடை ரூ.5\-

தனிச்சுற்றுக்கு மட்டும்

சந்தா ரூ.30\-

படிப்பகம்

www.padippakam.com


# இம்ரான்

★

ஜெராக்ஸ் FAX

எலக்ட்ரானிக் டைப்பிங் STD/ISD

ஸ்பைரல் கொரியர்ஸ்

**டெலிபோன் லிங்க் சர்வீஸ்**

70951 - 54964
புதிய பேருந்து நிலையம் அருகில்,
மதுரைச் சாலை,
அருப்புக்கோட்டை - 626 101.

71054 - 54967
நாடார் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்
திருச்சுழி - பந்தல்குடி சாலை,
அருப்புக்கோட்டை - 626 101.

## இம்ரான் டிராவல்ஸ்

அருப்புக்கோட்டை to சென்னை

**ஓமினி பஸ்கள்**

மாலை 6.30, 7.30 (V.I.P.) 8.30

24 மணி நேர புக்கிங்


படிப்பகம்

www.padippakam.com

– மாற்றுப் பிரதிக்காக –

கதவு - 6
மே 1999

வெளியீடு :
கருத்தாளர் வட்டம்
(A unit of APPA)
5-36-4B, பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு
அருப்புக்கோட்டை - 626 101.
✆ 04566-73322.

நிர்வாக ஆசிரியர் :
மதிகண்ணன்
(கலைவழி மக்கட் பணியம்)

துணை ஆசிரியர் :
முரளி

ஆசிரியர் குழு :
ஜெயராம்
ஜீவநேரு
ராஜசேகர்
அரு.வீ. சிவபாரதி

கணனி :
சிவா லேசர் பிரிண்டர்ஸ்
அருப்புக்கோட்டை.
✆ 04566-72768.

மதிப்புரைக்காக நூல் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

படைப்புகள் படைப்பாளிகளின் கருத்துக்களையே முன்வைக்கின்றன. APPAவின் கருத்துக்களை அல்ல.

சந்தா ரூ. 30/-
நிர்வாக ஆசிரியர் பெயரில்
அனுப்பவும்

அன்பு நண்பர்களே...

வணக்கம்...

நடப்பு மாதங்களில் இரண்டு விதமான போர்கள் துவங்கி உள்ளன. முதலாவதாக எல்லைப் பகுதிகளில் இந்தியாவிற்கு உள்ளே ஊடுருவிய ஊடுருவல்காரர்களை விரட்டும் போர். இரண்டாவதாக அடுத்த பத்து ஆண்டுகளில் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என 1950ல் அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகளின்படி ஒத்துக்-கொண்டதை 49 ஆண்டுகளின் பின் தீவிரமாக முயற்சி செய்யும் தமிழ்நாடு அரசு.

இரண்டுமே கண்துடைப்பாய், சடங்காய் வெற்றி விழாவுடன் பாடுபட்டோருக்கான பாராட்டுடன் முடிந்து விடக் கூடாது என விரும்புகிறோம். இரண்டுமே நாட்டின் சீர்குலைவிற்கு எதிரான நடவடிக்கைகளே. வெற்றி பெறவும் தொடர்ந்து கண்காணிக்கவும் வேண்டி....

என்றென்றும் அன்புடன்,

ஆசிரியர் குழு.

www.padippakam.com

## தகழி.... வாழ்கிறார்

தகழியில் பிறந்த சிவசங்கரன் (1914-1999) பிள்ளை, மெத்தப்படித்த வேளாளர் மகன். தலைசிறந்த கதகளி கலைஞர் குஞ்சு குரூப்பின் உடன் பிறப்பு. குடும்பமே சமர்கிருதப் பண்புமிக்க குடும்பம். "கேஸரி" இலக்கிய பத்திரிகையின் ஆசிரியரான பாலகிருஷ்ண பிள்ளையின் இலக்கிய அரசியல் கலந்துரையாடற் பள்ளி மாணவர். தொழில் முறையில் ஒரு வழக்கறிஞர்.



1934ல் "புதுமலர்" என்ற சிறுகதைத் தொகுதி மூலம் நன்கு அறியப்பட்ட தகழி சிவசங்கரன் பிள்ளையின் செம்மீன் (1956) நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. அம்பலப புழையில் தான் சந்தித்த செம்படவ மக்களின் வாழ்க்கையின் பரிமாணத்தை செம்மீனாகப் படைத்த தகழி 1948ல் ஒரு குடியானவன் மகன் என்ற நிலையில் தான் பட்ட பாட்டை இரண்டு படி என்ற நாவலில் எழுதினார். இவ்விரு நாவல்களும் மலையாளத்தில் திரைப்படமாக வெளிவந்துள்ளன.

சமர்கிருதப் பண்பில் ஊறிய குடும்ப உறுப்பினரான தகழி படைத்த தலித் நிலை பற்றி பேசிய நாவல்கள் "இரண்டு படியும்" "தோட்டியின் மகனும்". விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்று அரசியல் நடவடிக்கைகளுக்காக தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த போது எழுதிய நாவல்தான் "தோட்டியின் மகன்" (1947). தன்மகன் தன்னைவிடச் சிறந்த வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காக தனது மக்களையே ஏமாற்றும் தோட்டி. சமுதாயக் கட்டுப்பாட்டால் தோட்டியின் மகன் பள்ளியிலும், தோழர்களிடையும் ஒதுங்கியே வாழ்கிறான். சமூகத்தை எதிர்க்கும் போட்டியில் தோற்று தோட்டி கொள்ளை நோயில் இறந்து போகிறான். தோட்டியின் மகன் ஒரு தோட்டியாகவே வாழ்க்கையைத் தொடங்குகிறான். போரில் தோல்விதான். ஆனால் போராட்டம் ஓயவில்லை.

கேரள கிருத்துவர்கள் பற்றி அருந்ததிராய் எழுதிய "சிறு பொருட்களின் கடவுள்" இப்போது (ஆங்கிலத்தில் எழுதியதாலும்கூட) அதிகம் பேசப்படுகிறது. 1959ல் தகழி எழுதிய "ஓஸபின் மக்கள்" கேரள கிருஸ்துவர்களின் வாழ்வை கேரள சமூக தளத்தில் ஆய்கிறது. மிகவிரைவாக எழுதக் கூடியவர் எனப் பெயர் பெற்ற (செம்மீன் இருபது நாட்களில் எழுதினார்) தகழி இன்று நம்மிடையே இல்லை. அவர் படைப்புகளில் வாழ்கிறார். செம்மீனில் பரிக்குட்டியாக, தோட்டியின் மகனாக, இரண்டு படியில் புலையன் மகனாக... அவர்களுடனான நம் வாசிப்பு உறவால் தகழி வாழ்கிறார் ●

www.padippakam.com

# மகள்

**[கதவு 5ல் மதி அம்மாவிற்கு எழுதிய கடிதத்திற்கு மதுரையிலிருந்து (பொற்கொடியிடமிருந்து) அன்பு மகள் மதிக்கு என ஒரு கடிதம் வந்திருக்கிறது. அக்கடிதம் - மகள் மதியிடம் சேர்க்கப்பட்டு விட்டது. அதன்படி.]**

அன்பு மகள் மதிக்கு, நீயும், மாப்பிள்ளையும், பிள்ளைகளும் நலந்தானே. உன் கடிதம் கிடைத்தது. இப்பவும் பக்கத்து வீட்டு உமா தான் நான் சொல்லச் சொல்ல எழுதினாள். வயதாகி விட்டதால் கண் சரியாகத் தெரியவில்லை.

உன் அப்பா தான் அடிக்கடி சொல்லுவார். என் மூத்த மகள் மதி பெயருக்கேற்றார் போல் அறிவு தான் என்று. நீ கேட்டு கொண்டது போல் உன் கடிதத்தை நான் பலமுறை வாசிக்கக் கேட்டேன்.

சென்ற முறை நீ இங்கு வந்த போது, அரசு உத்தியோகம் பார்க்கும் கை நிறையச் சம்பாதிக்கும் உன் தோழி பற்றிக் கூறினாய். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான அவள், குடியும், கெட்ட பொம்பளைகளின் சகவாசமுமாய் வாழ்ந்த அவள் கணவனை விவாகரத்துச் செய்து விட்டு தனியாக வாழ்ந்ததுடன், சில மாதங்கள் கழித்து தன்னுடன் வேலை பார்க்கும் வேறு சாதிக்காரனை மறுமணம் செய்து கொண்டாள் என்ற செய்தியை பூரிப்போடு நீ சொன்ன போது நான் பதறித்தான் போனேன். கேவலமான நடத்தை கொண்ட பெண் என்று திட்டத்தான் செய்தேன். நீயும் மாப்பிள்ளையும் கட்சிக்காரர்கள். பெண் சுதந்திரம், சமஉரிமை என்றெல்லாம் ஏதோ எனக்குப் புரியாத விசயமெல்லாம் பேசுவீர்கள் என்றேன்.

அன்றைக்கும் நீ எப்போதும் போல என்னைக் கேலி செய்தாய் போம்மா! உன்னைப் போல அடிமையாய் வாழ எங்களால் முடியாது என்று நீ சொன்னது உண்மைதான். சந்தோசமாய் வாழ்வதாய் காலமெல்லாம் நடித்த அடிமைகள் தான் நாங்கள். நீ போன பிறகு, நீயும் மாப்பிள்ளையும் பேசியவற்றை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தேன். நான் சொன்னால் நீ சந்தோசப்படுவாய். இப்ப உன் தோழியின் செய்கையைத் தவறு என நினைக்கவில்லை நான்.

அந்த காலத்துல உன் அப்பா போட்ட ஆட்டம் தாங்காம நெலகொளஞ்சி, அழுது கதறி அடிக்கடி என் பிறந்த வீட்டுப்படியேறியவ தான். ஆரம்பத்தில் ஆதரித்த என் அப்பா, அம்மா போகப்போக எரிச்சல் அடைந்தார்கள். "இதுதான் வாழ்க்கை, ஆம்பிளைன்னா அப்படி, இப்படித் தான். உன் தலைவிதி அப்படி. உனக்குப் பின்னால் தங்கைகள் இருக்கிறார்கள். இப்படி ஏதேதோ சொன்னார்கள். நானும் பலமுறை செத்துப் போயிருவோம்னு நினைச்சிருக்கேன். ஆனா அறிவாப் படிக்கிற உன் மூஞ்சியப் பார்த்தா சாகவா தோணும்? எப்பாடுபட்டாவது உங்கள் கரையேத்தணும்னு தான் உன் அப்பா செய்த கொடுமைகளை எல்லாம் சகிச்சுக் கிட்டேன். உள்ளுக்குள்ள குமுறி, குமுறி அழுதாலும் வெளியில உன் அப்பா பேரைக் காப்பாத்தணுமே. அதற்காக போட்ட வேசம். போகப்போக என் முகமே மாறி வேசமே, முகமாப் போச்சு. உன் தோழி போல் நான் படித்தவளோ, சம்பாத்யம் செய்தவளோ இல்லை.

ஒண்ணு மட்டும் எனக்குப் புரியது எங்க காலத்துல வீட்டை விட்டு வீதியில இறங்கத் தெரியாது." எம் பொண்ணுக்கு அவ்வளவு அடக்கம், பணிவு" என்று பெருமையாய்ச் சொல்வார்கள். அதெல்லாம் நீ சொல்வது போல அடிமைக்குச் சூட்டும் பட்டம். முள் கிரீடம் தான். இந்த நல்லபெண் பட்டத்தால் நாங்கள் நல்லா வாழவில்லையே, கண்ணீரும், கம்பலையுமாகத்தான் வாழ்க்கை

www.padippakam.com

ஓடியது.

இப்ப ஒரு விசயத்தை நான் ஆழமாகப் புரிஞ்சுக்கிட்டேன். படித்து நாலு காசு சம்பாதித்து, தன் சொந்தக் காலில் நிற்க திராணியற்ற எங்களை மாதிரி பொம்பளங்க அடிமையாய்த்தான் வாழ முடியும். சொந்தக் காலில் நிற்கும் வீட்டுக்கு வெளியில் சென்று உழைத்து பணம் சம்பாதிக்கும் பெண்களால் மட்டுமே சுதந்திரமாக வாழ முடியும் என்பதை நானும் புரிந்து கொண்டேன்.

அடுத்து அருண் விசயம் பலமுறை யோசித்துப்பார்த்தேன். நீ சொல்வது சரிதான். அவன் பெண்டாட்டி சாரதா, வேலைக்குப் போகட்டும் அவளாவது உண்மையான சந்தோசத்தோட வாழட்டும்.

யோசித்துப் பார்த்தேன் எங்கள மாதிரி பொம்பளங்க நிலைமையை. நல்லவரோ கெட்டவரோ, உசிரோட இருந்தவரை உன் அப்பா எனக்குப் பாதுகாப்பு. ஆனா அதுக்குப்பின்னாடி பொம்பளைப் பிள்ளைங்க கிட்ட போக முடியுமா? மகன்கள் கிட்டத்தான் போக வேண்டியிருக்கு. அவனுகளும் பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு எங்கள வெளியில வெரட்டி விட்டா வேறு கதி எங்களுக்கு? அதனாலதான் வேலைக்குப் போயி, சம்பாதிக்கிற மருமகள்னா கை ஓங்குமேன்னு பயப்பட வேண்டியிருக்கு.

இனி பொம்பளைங்க படிச்சு சுயமாச் சம்பாதிச்சு தன் சொந்தக் கால்ல நின்னாத்தான் மதிப்பு மரியாதை எல்லாம். இல்லையின்னா எத்தனை சொத்து சுகம், சீர் செனத்தி, நகை நட்டு இருந்து என்ன பிரயோசனம்? என்னைய மாதிரி நல்லா வாழ்ற மாதிரி நடிக்கிற அடிமையாய் இருக்க வேண்டியது தான்.

நீ சொன்ன மாதிரி அருண் உன் அப்பா மாதிரி பொம்பளைன்னா மட்டம்னு நினைக்கிறவன் இல்ல. அது கூட உன் வீட்டுல வளர்ந்ததால, உன் புருசனின் நடவடிக்கைகளைப் பார்த்ததால இருக்கலாம்.

சாரதா வேலைக்குப் போக, நான் மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கிறேன். போதுமா. பரிட்சை லீவில எம் பேரப்பிள்ளைகளைக் கூட்டிக்கிட்டு இங்க வா. பதில் கடிதாசி போடு.

உன் பிரியமுள்ள,
அம்மா.

---

**சிற்றிதழ் அறிமுகம் பகுதியில் கதவு இதழை அறிமுகம் செய்த**
**'பயணம்' - பெங்களூர்**
**இதழுக்கு நன்றி.**

---

**சிற்றிதழ் அறிமுகம் பகுதியில்**
**'அறிமுகம்' என்ற நிலையினின்றும் மேலெழுந்து 'மதிப்புரை' வழங்கிய**
**'இதயம் பேசுகிறது'**
**இதழுக்கு நன்றி.**

---

www.padippakam.com

# வாழ்க்கைக் கல்வி

- பிரபு

ஆங்காங்கே தோரணங்கள் வீட்டின் முன் வாழைமரம். கட்டுவதற்காக கிடத்தப்பட்டிருந்தது. "ஏலே பாண்டி எங்கடா போன", வாசல்படியை கால்கள் தொடும்முன் சத்தம் வந்த திசையை நோக்கினான். "பாட்டி எப்ப வந்த." "இப்பதாண்டா வந்தே", ஆமா "என்னடா பண்ணுற" பாட்டி நா நெல்டாங்கில வேல பார்க்குறே பாட்டி" பாட்டியிடம் சித்தி சிற்றப்பன் பற்றி விசாரித்து விட்டு வீட்டினுள் நுழைந்தான். அத்தை, மாமா மற்றும் வாண்டுகளை விசாரித்து விட்டு அம்மாவைத் தேடினான். புறக் கடையில் தங்கை அருக்காணி வெட்டி எடுத்து வந்த முள் கட்டைகளை வைத்து அம்மா அனைவருக்குமாக சோறு ஆக்கிக் கொண்டிருந்தார். கடைக்குச் சென்று வந்தது போக மீதத்தை அம்மாவிடம் கொடுத்து விட்டு, குடிப்பதற்காக தண்ணீர் எடுக்க பக்கத்து தெருவிலுள்ள அடிகுழாய்க்கு குடத்துடன் சென்றான்.

மதிய வெயிலிலும் கூட்டம் அதிகமிருந்தது. வியர்வை மழையில் நனைந்து தண்ணீர் கொண்டுவந்து வைத்தவன். பக்கத்து ஊரிலுள்ள சொந்தங்களுக்கெல்லாம் சொல்லியாகிவட்டது. சாயந்தரம் வந்து விடுவார்கள். நாளை ஏதாவது, பொருளாக செய்வார்கள். அனைவரும் சிறு வியாபாரம் செய்யறவங்க.

மதியம் சாப்பாட்டிற்கு அம்மாவிடமிருந்து அழைப்பு வந்தது. அடுப்படியை அடுத்து முன் இருந்த திண்ணையில் அனைவரும் அமர்ந்தனர். அனைவரையும் கவனித்து விட்டு சாப்பிடுவதற்குள் சமயலுக்கான சாமான்களை நண்பன் மாரிமுத்து இறக்கி வைத்தான். கந்து வட்டி ரெட்டியாரிடம் வாங்கிய ஆயிரம் ரூபாய் கடனில் சாமான்கள் போக மீதம் ஐநூறு ரூபாய் கொடுத்துவிட்டு குளித்து விட்டு வர்றேன் என்று சொல்லிப் போனான்.

ஒவ்வொருவராக வந்தனர். இரவு சமயல்காரன் பால் மற்றும் இத்தியாதிகளை ஞாபகப்படுத்தி விட்டு மீண்டும் அதிகாலை வருவதாகச் சென்றான். இரவு அனைவரும் சாப்பிட்ட உடன் மீதமிருந்த சாப்பாட்டை சாப்பிட்டு முடித்தான் பாண்டி.

அதிகாலை அம்மா எழுப்பினாள். எழுந்த உடன காபி குடித்து விட்டு வாழை மரம் கட்டும் போது மனம் மகிழ்ச்சி கொண்டது. உறவினர்கள் தரும் சீதனம் மற்றும் அனைத்தும் சேர்ந்து தங்கை கல்யாணத்திற்கு போதும். ஏதும் வாங்கத் தேவையில்லை.

முதல் தாவணி தாய்மாமன் தான் வாங்கித் தரணும். அவரும் சடங்கு நாள்ளதான் வாங்கித் தரணும்ன்னுற பழக்கத்தால வெட்டியா இரண்டாயிரம் ரூபாய் செலவான வருத்தம் இடையிடையே சோற்றில் கிடக்கும் கல்லாய் அடிக்கடி உறுத்தியது. ஆனாலும், "தாவணி கட்டினாத் தான் வேலைன்னு" காரணங்காட்டி தங்கச்சி தீப்பட்டியாபீஸ் போறத எந்த ஏஜண்டாலயும் நிறுத்த முடியாது என்ற விஷயம் அவனது குடும்ப நிலை காரணமாக தங்கைக்கு வயது பனிரெண்டுதான் என்றாலும் கூட மகிழ்ச்சியாய் இருந்தது ●

www.padippakam.com

# தலித் சிறுகதைகள்

\- மு. பழனிக்குமார்

கிரா, பிரபஞ்சன், சந்தான பாரதி, நீல பத்மநாபன், வல்லிக் கண்ணன் சு. சமுத்திரம், பாவலர் ஞான பாரதி என்று பெரிய பட்டியலாய் முன்னுரை தொடர்கிறது. புத்தகம் பற்றிய விமர்சனம் அதற்குள்ளாகவே அடங்கி விட்டது. இருப்பினும் இது விமர்சனம் அல்ல ஒரு அறிமுகமே.

22 கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தளத்தில் ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வொரு நிகழ்வாய்க் கூறி நெஞ்சைப் பிழிகிறது. என்னைப் பொறுத்த மட்டில் இதில் வரும் எந்தக் கதையுமே தள்ளிவிட முடியாதபடிக்கு முகத்தில் அறைந்து நெஞ்சை அழுத்துகிறது. இந்தப் புத்தகம் பற்றிக் கூற எனக்கு எந்தத் தகுதியுமில்லை.

ஒரு தலித்தின் பிரச்சினைகளை, அவனுக்கு நேரும் சமூகப் புறக்கணிப்புகளை, இழிவுகளை, துன்பங்களை உண்மையில் ஒரு தலித்தின்றி பிறிதொருவரால் சொல்ல இயலாது.

ஒவ்வொரு கதையையும் படிக்கும் போது நமக்கே அய்யோ, சேய் என்னடா இந்த எழவெடுத்த பய வாழ்க்கை என்று தோன்றும் போது அதை அனுபவிப்பவனுடைய மனம் என்ன பாடுபடும் என்பதை நாம் அனுபவித்தால் தான் உணர முடியும்.




தொகுப்பாசிரியர்- ஞானபாரதி

வெளியீடு:
இளங்குயில்கள்
மதுரைச் சாலை,
ஆண்டிபட்டி.

பக்கங்கள்-
விலை-

ராசீ ரங்கதுரையின் மொட்டை என்னும் சிறுகதையில். "இந்தச் சாதிக்காரப் பயலுக்கு குடிக்கக் காசு செரைக்கக் கத்தி இப்பிடி எதுவேணாலும் கொடுத்துதவலாம் ஆனால் படிக்க உதவுனம்னா நாளைக்கு நமக்கு அடங்கி நடக்க மாட்டானுங்க." என்று கூற்று சமூகத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் இடர் நேர்கிறது. சகஜமாகப் பழகினாலும் "ஏதோ நம்ம கிட்ட காரியம் ஆக வேண்டியிருக்கு அதான் இப்படி சகஜமாப் பழகுறான்" என்று நட்பைக் கூட சந்தேகமாப் பார்க்கக் கூடிய அவல நிலைக்கு ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

புத்தகம் படித்து முடித்து வைக்கும் போது மனமே ஒரே பாரமாக எதையோ இழந்து விட்டதைப் போன்ற ஏக்கமும் சொல்லொண்ணா துயரமுமாய் போகிறது.

ஏழையென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,

இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்து
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே!

என்று பாரதியின் கனவு மெய்ப்பட வேண்டும் என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும் என்ற மக்களின் ஏக்கமும் நிறைவேற வேண்டும்.

நாம் வெள்ளக்காரங்கிட்ட சுதந்திரம் வாங்குனப்ப, நாம் வித்தியாசம் பிரிச்சு வாங்கல. இந்த மண்ணு பொதுவானது.

இதில் நல்லதுதான் விளையணும், கெட்டது விளையக் கூடாது. ரத்த வாடை பாக்குறது மனுச குணம் இல்ல, என்ற ஞான பாரதியின் வார்த்தை எல்லாருக்கும் தான். படிக்க வேண்டிய புத்தகம் மட்டுமல்ல; மற்றவர்களையும் படிக்கச் சொல்லி தூண்ட வேண்டிய புத்தகமும் ஆகும்.

★ ★ ★

## இன்னொரு போதிமரம்

தமிழுக்காய் தமிழருக்காய் உணர்வாளர்கள் மதுரையில் கூடியிருந்த கூட்டத்தின் நூற்கடை வரிசைகளின் பக்கமாய் அமர்ந்திருந்தபோது நண்பர் மதிகண்ணன் அய்யா கோவை ஞானி அவர்களின் வழி கவிஞர் பாலை நிலவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். இவரும் கவிதை எழுதுகிறவர்தான் என்று அறிமுகம் செய்து என் புத்தகங்களைக் கொடுத்தார். பாலை நிலவனின் இன்னொரு போதி மரத்தைப் பெற்ற கையோடு - அடுத்த கதவு இதழுக்கு கவிதை நூல் விமர்சனம் நீங்கள்தான் எழுதுகிறீர்கள் இந்தாருங்கள் என அன்புக்கட்டளையிட்டார் மதிகண்ணன்.

பத்தாண்டுகளாக கவிதையில் உருப்படியாகச் செய்யவேண்டும் என்ற உணர்வில் படைப்புக்களை ஆக்க முயலும் என்னை (படைப்பாளியை) விமர்சகனாய் ஆகச்சொன்னதன் விளைவை - வேலையின் ஆழத்தை நன்கு உணர்ந்தேன். முன்னுரை எழுதுவது போலல்ல இப்பணி என்பதால் நூலைப் பன்முறை படிக்க... புரிதலும் கேள்விகளும் வளர்ந்து கோண்டேயிருக்கின்றன. நேர்மையாகவும் எதிர்மறையாகவும் முதலில் "காலத்தினாலாய பயன் கருதி" மனித நேயம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தைக் கவிதையில் சொன்ன கவிஞருக்கு நன்றியும் வாழ்த்துக்களும். புத்தர் இருந்திருந்தால் மரங்களை அழிப்பதிலிருந்துதான் துன்பங்கள் தொடர்கின்றன என்று கூறியிருப்பாரென்று திரு. ஞானி அவர்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை.

இயற்கை ஆதாரங்களினூடே பின்னிப் பிணைந்து வளர்மனித வாழ்க்கை பெருமதிப்பிற்கும் போற்றுதலுக்கும் உரியது. நாம் வளர்த்து நம்மை வளர்த்தவைகளை நாம் காத்துத்தான் ஆகவேண்டும். இயற்கை - மனிதன் - வாழ்க்கை - இயற்கை, இச் சுழற்சியின் தேவையும் உண்மையுமே இக்கவிதையில் - கதையில் கருப்பொருட்கள்.

கவிதையிலே நடு இழையாக கதை ஒன்றை அமைத்திருக்கிறார். கதையோட்டமாகச் சொல்வதினால் நினைத்த கருத்துக்களைச் சரியாகப் பங்கிட்டுச்

சொல்லும் வசதி கிடைத்திருக்கிறது. குறித்த அளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்.

கவிதையிலேயே கதை சொல்லுவது தமிழ்க் கவிதைத் துறைக்குப் புதிதல்ல. சங்கம் முதற்கொண்டு இன்றுவரை நிறையப்பேர் பாடியிருக்கிறார்கள். பாரதி தொடங்கி சிற்பி, தருமுசிவராம், கலாப்பிரியா என பட்டியல் நீளும், கா.நா.சு அவர்கள் தன் சுயசரிதையை 15 காண்டங்களில் 1300 வரிகளில் கவிதையில் எழுதி சில பகுதிகள் கணையாழியில் வெளிவந்ததாக கூறுகிறார்கள். (மீரா - எதிர்காலத் தமிழ்க்கவிதை). அந்த வரிசையிலே வந்திருக்கிற கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக இந்நூல் அமைகிறது. முயற்சியும் வெளியீடும் பாராட்டப்பட வேண்டியதே.

சந்தைக் கலாச்சார கறுப்பு நகரில் அனாதை வாழ்வில் அனுபவம்பெற்று மானுடம் பாடுபவன் வெண் நிலவன். மழைத்துளிக்கும் மண்மெத்தை வலிக்குமோ எனத் துடிக்கும் இயற்கையை நேசிப்பவள் சங்கீதா. இருவரும் ஒரே பள்ளியில் படிப்பவர்கள். இருவரும் அவரவர் இரக்க உணர்வால் கொள்கைகளால் கவரப் படுகிறார்கள். அதனாலேயே உள்ளுணர் காதல் வளர்கிறது - வளர்க்கிறார்கள். அவர்களின் தோழர்கள் அன்பால் உதவுகிறார்கள். நகரங்களில் மரங்கள் வெட்டிச் சாய்க்கப் படுகையில் உயிர்துறக்க வெண் நிலவன் மற்றும் தோழர்களோடும் உண்ணாவிரதம் இருந்து உயிர் தந்து மரங்களைக் காக்க முடிவெடுக்கிறாள் சங்கீதா. இவர்களின் அன்பை கொச்சைப் படுத்திய பெற்றோர், ஆசிரியர் மனம் மாறுகிறார்கள். அரசாங்கமே மாலைபோட்டு வரவேற்று வாழ்த்துகிறது. விழா மேடையில் சங்கீதா இயற்கையை நேசிக்கச் சொல்கிறாள். வெண்நிலவன் "தமிழ்" பேசுகிறான். சங்கீதாவின் மனந் திருந்திய பெற்றோர் கிராமம் திரும்ப முடிவெடுக்க, விடைகூறி சங்கீதா புறப்பட வெண்நிலவன் காத்திருக்கிறான். இது கவிதையில் சொல்லப்படும் கதை.

கவிதையிலே கதையும் கதையின்வழி கவிதையையும் பிணைத்துள்ள சிறப்புக்களால் கவிதை உச்சி நுகரலாம். இத்தனை சின்ன வயதிலேயே, இவ்வளவா.. இப்படிப்பட்ட விசயங்களா .. பேசுவார்களா என்பதும் கதை அமைப்பிலும்தான் கேள்விகள் எழுகின்றன.

கவிதையின் தரம் பிரிப்பதற்கு மொழி, சொல், அடிக்கருத்து, வடிவம், உத்தி, கொள்கை, மொழிநடை, சார்புநிலை, கருத்து நிலை என்று நிறையப் பேசுவார்கள். எதுகை, மோனை, உவமை, உருவகம், படிமம், குறியீடு, இருண்மம், ...று கவிதை வெளியீட்டு உறுப்புக்களை வகைப்படுத்துவார்கள். புனைவியல், இயற்பண்பு, ஏதார்த்தம், மிகை ஏதார்த்தம், இருத்தலியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம் என்றெல்லாம் இன்று நிறைய இலக்கியப் படைப்புக்கொள்கைகளை வகைப்படுத்துகிறார்கள். இவையெல்லாம் சொல்லி விளக்கி பொருத்திக் காட்டி கருத்துரைப்பதென்றால், "மற்றொன்று விரித்தலென்றாகும்" என்பதனால் இன்னொரு போ[illegible] மரத்தடிக்குப் போவோம்.

"இயற்கையே மனிதனிடம் பேசு" "ஒளியை விரும்புங்கள்"
"இயற்கை வாழ்வின் இறக்கை" "மரங்களே வெட்டப்படும் போதாவது அழுங்கள்"
"அஃறிணைகளைக் கொண்டாடுவோம்"
"காயங்களைக் கவனிப்பார்களா?" - போன்ற தலைப்புக்களிலமைந்த கவிதை இயற்கை நேசம் பேசுவனவாகவும், "பொதுவுடைமை பிறக்குமா"
"இனியொரு பாரதம் செய்வோம்"
"மொழியைப் பத்திரப்படுத்து பிறகு போரிடு - என்பவை

www.padippakam.com

தமிழும் மனித நேயமும் சொல்லும் தலைப்புகளாகவும்,
“காதலே உனது பக்கங்களில் எத்தனை பக்கங்கள்”
“இதயம் திறந்தால்”
“காதல் செய்வோம்”
“உயிரெழுத்தே உடைந்து போகாதே” - போல் வரும் தலைப்புகளில் காதலும், சாதி, மத எதிர்ப்புக் கருத்துக்களும் என மொத்தம் பத்தொன்பது தலைப்புக்களில் அமைகிறது.
“சமுத்திரத்தில் செத்துப்பார்” - ஈழத்தை நினைவுபடுத்துகிறது.

சங்கீதா இயற்கையின் பாதுகாப்பு குறித்து கவலை கொள்கிறாள். வெண்நிலவன் மனிதநேயம் பரப்ப விழைகிறான். வெண்நிலவன் தோழர்களிடம் நடத்தும் விவாதங்கள் சாதி-மத-இனம் கடந்த தோழமை விசாரிப்புகளின் முகம் காட்டும் முகவரிகள்.

மொழி குறித்த பார்வைகள் கருத்துகள் மிகத் தெளிவாக வெளிப்படையாக வெண்நிலவன் வழி கவிஞரின் குரலாய் ஒலிக்கிறது. தமிழ் - தமிழர் - தமிழ்த் தேசியம் எனும் நடைமுறை வாழ்க்கையின் முக்கியத்துவமும் கட்டாயமும் சொல்லப்படுகின்றன. உணர்த்தப்படவில்லை. கேள்விகளும், பதிலும் என நிறைய பேசுவதினாலேயே இவ்வுணர்வு ஏற்படுகிறது.

பல இடங்களில் பெயர்களும் விளக்கங்களும் மிகப் பச்சையாக நேரிடையாக அமைகின்றன. பிரச்சார வாடை எனச் சொல்ல நினைத்தேன். இங்கு எதில் தான் பிரச்சாரம் இல்லை - நினைவு வந்தது சமாதானம் கொண்டேன்.
(முந்திரித் தோட்டத்தில் அமர்ந்து பெரியாரைப் படிப்பதைப் போன்றது - ப-39.
லெனினையும் பெரியாரையும் வாசித்து முடியுங்கள் - ப-19.
மூன்று விதமான முட்டாள் மனிதர்கள்
முயற்சி செய்து சொன்ன முட்டாள் தனம்
கலகங்கள்
சிலுவைகள்
மினராக்கள் - ப-50 இவை போன்றவை அதிகம் காந்தி - திலீபன் உண்ணா விரதம் பற்றிய பாலை நிலவனின் நோக்கு மிகச் சரியானதே. படைப்பின் பாத்திரங்கள் அனைத்தும் கண்ணீரால் தம்மைத் தாமே நிரப்பிக் கொள்வதை தவிர்த்திருக்கலாம். கவிதையாக்கலில் உவமையும் உருவகமும் ஒருங்கே கலந்து கிடக்கின்றன. கவிதை தலைப்புகளிலும் கவிதைகளிலும் அதிகமாய் குறியீட்டுச் சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இவையே கவிதை நேர்த்திக்கும் கைகொடுக்கின்றன.

“இருபதாம் நூற்றாண்டுத் தலை
இப்படித் தான் மொட்டையடிக்கப்பட்டு
அம்மணமாகிக் கிடக்கிறது” (ப-4)

“மனச்சட்டியின் வெப்பத்தில் அறிவைக் காய்ச்சி
உலகத்தின் ஒட்டு மொத்த ஞானத்தை
கஞ்சியாக்கி கரைத்துக் குடித்திருந்தான்” (ப-5)

இவ்வாறு பக்கத்துக்குப் பக்கம் உருவக மற்றும் படிம நிலையில் காட்சிப்படுத்தலின் கைவண்ணம், தேர்ந்த நடை நூல் முழுமைக்கும் அமைகிறது. இருட்டின் சுவடு, வெள்ளை வெளிச்சம், தொலைத்த வாழ்க்கை. விடியல், வசந்தம் விலங்குகள் கழற்றப்படுமா? என்பன போன்ற பயன்பாட்டு முறை சிறப்பான ஆழமான அர்த்தங்களைத் தருகின்றன. ஆனாலும் “புரட்சி, தீ, விடியல், கீர்த்தி போன்ற

படிப்பகம்

www.padippakam.com

வார்த்தைகள் இல்லாது இவர்களால் புரட்சிக் கவிதைகள் பாட முடியாது" என்பவர்களுக்குத் தோதாய் அமைந்து விடுமோ என்ற கவலையும் தொற்றிக் கொள்கிறது.

இவ்விடத்தில் ஒன்றைச் சொல்ல ஆசை உருவகப்படுத்தல் நடையைக் கையாண்டதன் விளைவோ, தலைப்பும் கூட இன்னொரு போதிமரம் என்றமைந்ததாலோ எனக்கு உடனடியாக கவிஞர் வைரமுத்துவின் இன்னொரு தேசியகீதமும் அவரது நடையும் அவருக்கே உரியதில்லை என்றாலும் கூட நினைவு வந்தது. வாசித்தபடியே வருகிற பொழுது இன்னும் சில நாட்களில் நீங்கள் வைரமோதிரம் அணிவித்திருக்கும் உங்கள் இந்தியாவிற்கு விரல்களே இல்லாமல் போகும் - ப-74" என்று பாலைநிலவன் பாடியிருப்பது சுதந்திரமோதிரம் செய்து கொடுத்தாய் பிறகு தான் தெரிந்தது இவர்கள் விரல்களே இல்லாத தொழுநோயாளர்கள் என்று (இன்னொரு தேசீயகீதம்) என வைரமுத்து பாடியிருப்பது சட்டென்று நினைவிற்கு வந்தது. இவை போன்றவற்றை தவிர்த்திருக்கலாம்.

நவீன தரகு முதலாளித்துவ புதிய காலனியப் பொருளாதாரம் கட்டமைக்கின்ற இன்றைய இந்திய, தமிழகச் சூழலில் மிகச்சிறிய வயதிலேயே குழந்தைகள் பிஞ்சிலே பழுத்தவர்களாக வளர்க்கப்படுகிற சூழலை உருவாக்கும் மக்கள் கலாச்சாரத்தை மண்ணாக்கும் சக்திகள் (தொடர்புச் சாதனங்களும், சினிமாவும்) மலிந்து கிடக்கின்றன. பிறந்து வளர்கிற ஒவ்வொருவரும் எல்லாம் தெரிந்தவர்களாக வளர்கிற நிலையிலேயே எதுவும் தெரியாதவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். பெரியமனுசத்தனங்களோடு குழந்தைகள் உருவாக்கப்படுகிற இக்காலக் கட்டத்தில் வெண்நிலவனும், சங்கீதாவும் நமக்கு ஆறுதல் தருகிறார்கள். எனினும், நடைமுறையும் நம் கல்விச் சூழலும் பொருந்திய வாய்ப்பாக அமையாத நிலையில் வயதுக்கு மீறி அளவுக்கதிகமாக (அதிகப் பிரசங்கித்தனமாய்) பேசுவதாகப்படுகிறது. கவிதை அளவில் வெற்றி என்றாலும் கூட, தற்பொழுது சினிமா பற்றி அதிகம் யோசிக்கிற என் புத்தி கதைப் பின்னலை ஆய்வதில் அதிகக் கவனம் அக்கறை காட்டியது. கதை விவாதம் இங்கு பொருத்தமானதல்ல. இன்னொரு போதி மரத்தடி ஞானத்தின் தேவை ஒவ்வொருவருக்கும் காலத்தின் கட்டாயமும் அவசியமாகும்.



| | | |
|---|---|---|
| நூல் | : | இன்னொரு போதிமரம் |
| முகல்பதிப்பு | : | செப்டம்பர் 1997. |
| பக்கங்கள் | : | |
| விலை | : | ரூ.30 |
| ஆசிரியர் முகவரி | : | பாலை நிலவன்<br>38, சுசனி பஞ்சாலை அருகில்<br>கோவை - 641 028. |

தமிழ் மொழி - தமிழுணர்வு மனித நேயம் என்றெல்லாம் புரட்சிபேசிய வெண்நிலவன் "என்றும் உங்களை என் இதயத்தில் சுமப்பேன்" என்று சொல்லிப் பிரியும் சங்கீதாவிற்காக காத்திருப்பேன் என்ற முடிவெடுப்பது சற்றே இடருகிறது. ஒருவித பயம் வருகிறது. இருப்பினும் முதற்பாகம் முற்றும் எனச் சொல்லி முடித்திருக்கிறார்.

நாளை எதுவும் நடக்கலாம். இயக்கம் நிற்காது. நேர்மறையான வழிகளில் பதில்கள் கிடைக்கலாம். நம்புவோம்.

- அழகுபாரதி

www.padippakam.com

# பெண்ணிய எழுத்து

கடந்த பத்தாண்டுகளாக "தலித் எழுத்துகள்" என்ற இலக்கிய வகை மேலோங்கியுள்ளது. தலித் பற்றி தலித்கள் எழுதுவது தலித் எழுத்தா? அல்லது தலித் பற்றி யார் எழுதினாலும் தலித் எழுத்தா? அல்லது எதைப் பற்றி வேண்டுமானாலும் ஒரு தலித் எழுதினால் (ஒரு தலித்தின் பார்வையில்) அது தலித் எழுத்தா? பட்டி மண்டபம் தொடர்கிறது. இதில் எது ஞாயம்? என்பதை விட இப்பட்டி மண்டபத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன என்றாராய்ந்தால் கிடைக்கும் விடை. நிறைய தலித் நண்பர்கள் எழுத வந்ததும், அவர்களில் பலர் சிறப்பாக எழுதுவதும். தங்களுக்கென ஒரு தனித்த அடையாளம், அதனை நிலை நிறுத்தும் அதீத முயற்சி.

"தலித்தியம்" பேசப்பட்ட காலத்திலேயே "பெண்ணியம்" பேசப்பட்டது. ஆனால், இங்கு பட்டிமண்டபம் இல்லை - பெண்கள் பற்றி யார் எழுதினாலும் பெண்ணிய எழுத்தா? அல்லது பெண்கள் எழுதுவது பெண்ணிய எழுத்தா? என. நிறைய பெண் எழுத்தாளர்கள் உருவாகாததும், ஒரு காரணம். இருக்கின்ற பெண் எழுத்தாளர்களில் பலர் அப்பளம் போடுவது, கோலம் போடுவது, கணவனுக்கு சோறு போடுவது போன்றவற்றறை எழுதி தங்கள் எழுத்துலகப் பயணத்தைத் தொடர்கின்றறனர். சமூகம், பெண்கள் பற்றி எழுதவும் அவர்கள் துணிவதில்லை.

இந்தச் சூழ்நிலையில் இலண்டனில் வாழும் தமிழ் எழுத்தாளர் திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் விருப்பத்திற்காக " தமிழ் நேயம்" பெண் எழுத்தாளர்களுக்கென ஒரு சிறுக்கதைப் போட்டியை நடத்தியது. 43 எழுத்தாளர்கள் 45 கதைகள் மூலம் கலந்து கொண்டனர். போட்டி முடிந்தது; இருவருக்கு பரிசு தந்தோம்; வேலை முடிந்தது; என்றில்லாமல் கதைக்கான ஓட்டப் போட்டியில் முதல் பரிசுக்கானவருடன் சிறப்பாக ஓடிவந்தவர்கள் என மேலும் பதினொருவரை தேர்வு செய்து, அப்பன்னிருவரின் கதைகளையும் "காயங்கள்" எனும் சிறுகதைத் தொகுதியாக்கி "நிகழ்" வெளியிட்டுள்ளது. பெண்களுக்கு அடக்க விலைக்கே நூல் என்பது புதிய ஒன்று.

ஒவ்வொரு கதையும் அதற்கான சிறப்பான குணத்துடன் கதையாடுகின்றனன. தன் கருத்தை தனதாகவே சொல்லும் தயக்கம் நிறையப் பேரிடம் உண்டு. இங்கும் ஏழு கதைகள் படர்க்கையில் (மூன்றாம் இடத்தில்) கதை சொல்கின்றன. எழுத்தாளர்கள் தன்னிலையில் எழுதிய ஐந்து கதைகளில். ஷர்மிளா தன்னை ஒரு ஆணாக்கி கதை சொல்கிறார்.

நூல் : காயங்கள்
(பெண் எழுத்தாளர் சிறுகதைகள்)

தொகுப்பு : ஞானி

வெளியீடு : "நிகழ்"
123, காளீசுரவன் நகர்,
கோயமுத்தூர் - 641 009.

பக்கங்கள் : 84
விலை : ரூ. 20
(பெண்களுக்கு
நூலின் அடக்க விலை ரூ.12/- மட்டும்)




படிப்பகம்

www.padippakam.com

இப்பன்னிரண்டு கதைகளிலும் சமூகத்தின் பலவகைப் பெண்கள் அடையாளம் காட்டப்படுகின்றனர். "தீப்பொறியில் தன் சம்பளத்தை அம்மாவின் வழிகாட்டுதல்படி அம்மாவிற்கு அனுப்பாத வெண்ணிலா; நீண்ட நாட்கள் ஒரே விடுதியில் தங்கியிருந்தும் ஒருவருக்கொருவர் பேசிக் கூடக் கொள்ளாத பெண்கள்; தாலி அணியாத, கோவிலுக்குச் செல்லாத, திரைப்படங்கள் பார்ப்பதைத் தவிர்க்கும் வெண்ணிலாவின் அம்மா; வீட்டுச் சண்டையால் உள்ளூரிலேயே விடுதியில் தங்கிப் படிக்கும் தீபா; "நான் எங்கே! அவர் எங்கே!" யில் போன பிறவியில் அவரவர் செய்த பாவபுண்ணியம் தான் இந்தப் பிறவியில் அனுபவிப்பது என்று நம்பும் ஜீவா; "காயங்கள் காயலாம்" இல் மகளுக்காக வாழும் அம்மா; அம்மாவின் முந்தைய விட்டுக் கொடுத்த வாழ்க்கையால் அம்மாவின் மீது கோபம் கொண்டு, அம்மா தன்னைப் புரிந்து கொண்டவள்தான் என உணர்ந்து கொள்ளும் மகள்; ஜானகியின் வளர்ப்புத் தாயாகிய ஜோசபின் டீச்சர்; பிறந்தவுடன் கொலை செய்யப்பட்ட ஜானகியின் தங்கச்சிப் பாப்பா; "வாழும் வரையிலும்" இல் தாழ்த்தப்பட்டவர்களாக அடையாளம் காட்டப்பட்ட இனத்துப் படித்த பெண்; தன் கணவனின் மூலம் வாரிசு மட்டும் போதும் என கடிதத்தில் மருகும் மனைவி; உடன் பணிபுரிபவரின் திறமையை ஏற்கப் பக்குவமற்ற ஆசிரியைகள்; "எதிரி"யில் மகளின் குடும்பத்தாரிடம் பாசமாயிருந்தது மகனின் குடும்பத்திற்கென செலவு செய்யும் போது இம்மி கணக்கு பார்க்கும் தாய் மரகதம்; இதை புரிந்து கொள்ள முடியாமல் பொது அரங்கில் உரை வீச்சில் பெயர் பெற்ற மகள் மலர்; வெளிப்படையாய் பேசி பலநேரங்களில் அதிர்ச்சி தரும் மலரின் தோழி அகல்யா; எல்லாம் புரிந்தும் எதையும் வெளிக்காட்ட முடியாமல் மனதிற்குள் புழுங்கும் மரகதத்தின் மருமகள் கமலி; "விடிவு காலம்" - இல் அறிவாய் ஆற்றலாய், உழைப்பின் உயர்வாய் லட்சுமி; "காலம் மாறும்" - இல் மருமகளை கொடுமைப்படுத்தும் மாமியார் பொன்மணி; சீரில்லாத கணவனைப் பிரிந்து காதலனுடன் இணையும் தாமரையாள், "அரங்கேற்றம்" - இல் மணிமேகலை; மாதவி; வசந்தமாலை; அரிவை; "தடை ஓட்டங்கள்" இல் திருமணத்தின் பின் எழுதுவதற்கான சூழல் வாய்க்காமலும், உடல் நிலை ஒத்துழைக்காமலும் ஆகிப் போன ஆறு சிறுகதைத் தொகுதி, ஒரு நாவல் எழுதிய பெண் எழுத்தாளர்இந்து; "அமைதிப் புறா" வில் கணவன் வழியை மாற்ற முயன்று முயற்சியில் தானும் உயிர் பலியான ஜமீலா; என்ன ஏதென்றறியாமல் செத்துப் போன சிறுமி பாத்திமா; "கிராமத்து அத்தியாயம்" இல் சிறுவயது முதல் நகர வாழ்வால் கவரப்பட்ட ராஜேஸ்வரி; அவள் தோழி கமல நாயகி; "தவம்" இல் நெடுநாளைய மன வேதனையால் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி கணவனை எரித்த மனைவி; உண்மை பேசி அம்மாவை சிறைக்கு அனுப்பிய பூமா; பூமாவை வெறுக்கும் அம்மா பெண் உமா; அவள் பாட்டி".

தொகுதியில் கண்டெடுத்த இப்பெண் பாத்திரங்களுடன் இணைந்து இயங்கும் பிற பாத்திரங்கள் என எல்லாமே தத்தம் நிலைப்பாட்டுத் தெளிவு கொண்டவை. சில கதைகளில் சில இடங்கள் வாசிக்கும் போது கட்டுரை வாசிப்பது போல் இருந்தது. அக்கதாசிரியரின் வாழ்வியல் குறிப்பைக் காணும் போது அது அவரின் முதல் படைப்பாக இருக்கிறது என்றால் அதிசயமே. வழக்கமான உள்ளடக்கங்களிலிருந்து மாறுபட்டு மிகத் துணிச்சலாய் வாழ்வின் நடப்பை முன்வைக்கும் லலிதாவின் "தீப்பொறி". "மனசுக்குள்ளே மண்டிக் கிடக்கிற குழப்பமும் அதனாலே ஏற்படுகிற பயமும் விலகிடுச்சுன்னா தெளிவு வந்துடும். அப்பறம் நம்ம காரியங்களை நாமே முடிவு செஞ்சுக்கலாம்" என பெண் விடுதலைக்காக "விடுதலையின் மூலமான" தன் நிர்ணய உரிமையைக் கூறுகிறது.-

படிப்பகம்

www.padippakam.com

இராச மணியின் "காலம் மாறுமி"ல் திருமணமாகி, வதைக்குள்ளாகி, வீடு துறந்து ஓடி வந்த ஒரு பெண்ணை (முன்னாள் காதலியை) ஏற்றுக் கொள்ளும் பக்குவப்பட்ட வஷந்த் அகதியாய் தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர். அவர் "இந்த மண்ணின் மைந்தர்கள்போல் அல்ல நான். வித்தியாச மண்ணிலிருந்து வந்தவன். நீதி, அன்பு, கடமை, தியாகம் எதுவென்று தெரிந்தவன்" என தாமரையாளிடம் கூறுகிறார். உண்மையைச் சொன்னால் தமிழ்நாட்டின் சில ஏறுமாறுகளை மண்ணின் மைந்தர்கள் என நினைத்து இராசமணி பொதுமைப்படுத்தி விட்டார். மேலும், நீதி, அன்பு, கடமை, தியாகம் எதுவென்று அறிந்தவர்கள் அங்கே தாய் மண்ணிற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்த்து நிற்கத் திராணியற்று, ஏதிலியாய் ஓடிவந்து, ஒழுங்கையின் ஓர நிழலில் இளைப்பாறி, ஒரு நன் நாளில் நாடு திரும்பி வெற்றி விழாவில் பங்கேற்கவும் அனியமாயுள்ள வெட்கமற்றோரின் வாயில் வரக்கூடா வார்த்தைகள் இவை. புலம் பெயர்ந்தோர் உணர்வில் புலம் பற்றிய சிந்தனையும் இயன்ற செயல் வடிவும் தேவை. இவ்வரிகள் இல்லாதிருந்தால் புரட்சிகர சிந்தனை கொண்ட இரண்டு உயிர்கள் தொடர்பான ஒரு சிறப்பான கதையாக அக்கதை இருந்திருக்கும்.

ஜீலியட்ராஜின் தவம் பூமாவின் உணர்வு நிலைக்கு நம்மை இட்டுச் சென்றது. இறுதி வரிகளில் பூமாவின் தாய் பாவமன்னிப்பு, பரிகாரம் என்றெல்லாம் புலம்பி இருக்கத் தேவையில்லையோ என்ற நினைவை தவிர்க்க இயலவில்லை.

பெண் எழுத்தாளர்களின் ஒரு நல்ல படைப்புத் தொகுப்பைப் படித்த திருப்தி உருவானது. முயற்சி எடுத்த கோவை ஞானி அவர்களுக்கு நன்றி.

- வீரா

## தீ ண் டா மை

1. மனத்துக்கண் தீண்டாமை மாயையைக் கொல்பவரே
நல்ல மறவராவார்; நம்பு
2. சாதிஎனும் தீயின்மேல் சாம்பலே தீண்டாமை !
நீறுபறுத்த நீள்நெருப்பே அ∴து
3. வேண்டாமை மாச்செல்வம்! அ∴தேபோல் தீண்டாமை
தீண்டாமை நற்செல்வ மே.
(தீண்டாமையைத் தீண்டாமையும் நல்ல செல்வமே)
4. தீண்டாமை ஒன்றன்று. உள்ளும் புறமுமாக
தோன்றித் தருமே துயர்!
5. தீண்டாமைப் பேயே விரட்டுவதற்கு வாய்வீச்சு
மட்டுமே போதாது! ஏன்?
6. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமெனும் பாவைச்
சுவரெங்கும் தீட்டல் அணி.
7. கள், காமம், காதல், கலைக்காட்சி சேர்க்கையில்
தீண்டாமை சேராமை ஏன்?
8. உணவு விடுதி திருமணம் செய்யிடத்தும்
தீண்டாமை ஆளுவது தீது!
9. வணிகத்தில் காதலில் வாழாத தீண்டாமை
கோவிலுக்குள் மட்டும் ஏன் கூறு!
10. தீண்டாமை தேய ஒருகோடி ஈ.வே.ரா.
போன்றவரும் போதாதாம் இன்று!

- பசும்பொற்கிழார்

படிப்பகம்

www.padippakam.com

**என் சின்னஞ்சிறு உலகத்தில்**
**என்னை**
**என் சின்னஞ்சிறு உலகத்தில் இருக்க விடுங்கள்**
**அம்மா மட்டுமே போதும்**
**அவள் எடுத்து வைக்கும் சோறே போதும்**
**வீட்டுக்காரியே போதும்**
**அவளோடு வாழும் எளிய வாழ்க்கையே போதும்**
**மக்களே போதும்**
**அவர்கள் நல்ல மனசே போதும்**
**நண்பர்களே போதும்**
**அவர்கள் செய்யும் உதவியே போதும்**
**நான் எழுதும் கவிதையே போதும்**
**அதன் மொழிச்சீரே போதும்**
**என் வீடே போதும் போதும்**
**இருக்கிற வசதியே போதும் போதும்**
**பிரபஞ்ச விசாலமெல்லாம் வேண்டாம்**
**பெரிய பெரிய சோதனையெல்லாம் வேண்டவே வேண்டாம்**

**நான் /**
**தோற்றதை**
**ஜெயிக்க**
**இழந்ததை**
**பெற வே**
**விட்டதை**
**பிடிக்க**
**பாக்கி வைத்**
**தீர்க்க**
**அழ**
**கூட**
**குடிக்**
**கூட**
**கெட்ட**
**பேசவே**
**காசு சம்ப**
**கனவு காண**
**'மதியாதார்**
**மதியாமை**

www.padippakam.com

# …த்தபன்

குறிப்பிட்ட படியே
குறிப்பிட்ட
அந்த பிராந்திக் கடைக்கே போகிறான்
குறிப்பிட்ட
அந்த பிராண்ட்தான் வாங்கினான்
குறிப்பிட்ட
அந்த கம்பெனி சோடாவே சேர்க்கிறான்
குறிப்பிட்ட
அந்த கொண்டைக்கடலைச் சுண்டல் தான் கொறிக்கிறான்
குறிப்பிட்ட மாதிரியே தான்
காலம் இடம் கூட
குறிப்பிட்ட
அவகாசத்தில் தான் குடிக்கிறான்
குறிப்பிட்ட அளவு காசுதான்
கடைப் பையனுக்கு இனாம் கொடுக்கிறான்
எல்லாம்
ஒரு மாறுதலுக்குத் தான்
குறிப்பிட்டாற் போலவே
இப்படி வேறு சொல்லிக் கொள்கிறான்

படிப்பகம்

www.padippakam.com

# மேம்பாட்டு ஒளிப்பேழை (Development Video)


-மு. பாலசுப்ரமணியன்

Development அல்லது மேம்பாடு என்ற சொல் இப்போது ஒரு மலினப்படுத்தப்பட்ட சொல்லாக பொருட்படுத்தப்படுகிறது. புதிய பொருளியல் உலகில் உருவாகி வரும் மேம்பாட்டு திட்டங்கள், குறிப்பாக பெரும் தொழிற்சாலைகள், பேரணைகள், பெருமின் திட்டங்கள், அணு உலைகள், படைத்தளங்கள் மீபெருஞ்சாலைகள், அகலத் தொடர்வண்டிப் பாதைகள் இப்படி பல்வேறு திட்டங்கள் வந்த வண்ணமுள்ளன. உலகமயமாதல், தாராளமயமாதல் என்ற மந்திரம் எங்கும் ஒலித்த வண்ணமுள்ளன. ஆனால், இந்த மேம்பாட்டில் பின்புறமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தும், வாழிடங்களைத் துறந்தும் காடுகழனிகளை விட்டு அப்புறப்படுத்தப்பட்டும் தங்கள் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக பறிகொடுத்துள்ளனர்.

நர்மதா அணையில் ஏராளமான மக்கள், தேரி அணைக்கட்டில் பல்லாயிரம் ஏக்கர் காடு வாழ் மக்கள், சுரங்கத் தொழிலில் பழங்குடிகள் பல்லாயிரம் பேர்கள் தங்களது இருப்பிடத்தை இழந்து ஏதிலிகளாக மாறியுள்ளனர். அமெரிக்க, ஐரோப்பிய அளவுகோல்களும் அதையொற்றிய மேம்பாட்டுத் திட்டங்களும் இன்று மேம்பாடு என்ற சொல்லை வேறு வகையில் விளக்கிக் கொண்டுள்ளன.

எனவே இச்சூழலில் நாம் "மேம்பாட்டு ஒளிப்பேழை" அல்லது Development Video என்பதைப் பற்றி சற்று உன்னிப்பாக பார்க்க வேண்டியுள்ளது. தற்போது மூன்று மேம்பாட்டு மாதிரிகள் முன்வைக்கப்படுகின்றன. அல்லது பொருளியல் கட்டுமானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

| மையப்படுத்தப்பட்ட அதிகாரஉறவு முறை | ஒன்றுக்கொன்றான (பரஸ்பர) உறவு முறை | போட்டியடிப்படை உறவுமுறை |
|---|---|---|




இப்போது மூலதன வகை பொருளியல் ஆட்சியே மேலோங்குகிறது. இன்று உலகம் முழுமையும் திறந்துவிடப்பட்ட பொருளியல், கட்டுப்பாடற்ற ஏற்றுமதி இறக்குமதி என்ற அடிப்படையில் அனைத்து பொருளியல் வரம்புகளையும் உடைத்து புதிய தளத்தில் இயங்குகிறது. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. அதே போல் பண்பாட்டு எல்லைகளும் குறுகிவிட்டன. செய்திதொடர்பு ஊடகங்கள் உலகை ஒரு குடைக்கீழ் கொண்டுவந்துள்ளன. எப்படி புதிய பொருளியல், சந்தையை ஒற்றைச் சந்தையாகமாற்றி வருகிறதோ, அவ்வாறே புதிய செய்தித் தொடர்பு ஊடகங்கள் ஒரே பண்பாட்டை நிறுவ முயல்கின்றன. இந்தமுயற்சியில் பல வெற்றிகளையும் பெற்றுள்ளன. பன்மயத்தன்மை என்பது மறைந்து வருகிறது. பொருளியல் சந்தையில் எப்படி பண்டங்கள் கிடைக்கின்றதோ அதோ போல் பண்பாட்டுச் சந்தையில் கலை, இலக்கியங்கள் பண்டமாக ஆக்கப்பட்டுவருகின்றன.

www.padippakam.com

இது ஒருவகையான போக்கு.

அதேபோல் இந்தியாவைப் பொருத்த அளவில், குறிப்பாக தமிழகத்தைப் பொருத்த அளவில் 2000 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவித சுரண்டல்தனம் தொடர்ந்து வந்துள்ளது. உலகம் முழுமையும் பொருளியல் தொடர்பான சுரண்டல் பொதுவாக இருந்த போதும், இந்தியாவைப் பொறுத்த அளவில் சமூகத் தொடர்பான சுரண்டல் நிலவி வந்துள்ளது. சாதியப் பிரிவினைகளில் குறிப்பாக வருணாசிரம முறைப்பாடுகளாக இந்த நிலை கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. பிறப்பின் அடிப்படையில் ஒருவன் அடிமையாகவோ, வெறும் உடல் உழைப்பாளியாகவோ இருக்க மட்டுமே முடியும் என்ற நிலையும், உடல் உழைப்பை விட மூளை உழைப்பே உயர்ந்தது என்ற மனப்பாங்கும் ஈராயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வந்துள்ளது. அதன் அடிப்படையில்தான் இன்று அலுவலகத்தில் எழுத்தர் வேலைக்காக மனுப்போடும் படித்த இளைஞர் கழனியில் இறங்கி கலப்பை பிடிக்க மறுக்கிறார். இதில் கூலி கூடுதலாக கிடைத்தாலும் அவர் விரும்புவது கிடையாது.

எனவே நாம் இப்போது இரண்டு வகையான எதிர்வுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஒன்று புதிய ஒற்றை வல்லாண்மை அல்லது ஏகாதிபத்தியம் என்ற போக்கு, மற்றது பழைய சமூகப்பிரிவினை என்ற வருணாசிரமப் போக்கு. இந்த இரண்டையும் இந்திய மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இவை மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒன்றுக்கொன்று எதிரானதுபோல் தோற்றமளிக்கலாம். ஆனால் இரண்டும் இரண்டு தளத்திலும் தனது நிறுத்தவே முயலும்.

உலக நாடுகளில், ஏழை நாடுகள் என்று தற்போது குறிக்கப்பட்டிருக்கும் பெரும்பான்மை நாடுகள் ஏழை நாடுகள் அல்ல. அவை இயற்கை வளத்தைக் கொண்டுள்ள உண்மையான வளமை மிக்க நாடுகள். இவை, அடர்ந்த காடுகள், மீன்வளமிக்க கடல்கள், கனிச்சுரங்கங்கள் போன்றவற்றையும், மக்கள் வளத்தையும் கொண்டுள்ளன. ஆனால் இவை உலகின் வறுமை மிக்க நாடுகளாகவே உள்ளன. இதை மாற்றுவதற்காக தற்போது அகவமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது உள்கட்டுமான மேம்பாட்டுத்திட்டங்கள் (Intra Structure Development Programmes) கொண்டு வரப்படுகின்றன. இவற்றால், பெரிய சாலைகள், தொலைபேசி இணைப்புக்கள், செய்தி இணையத் தொடர்புகள், அணுமின் நிலையங்கள், விண்மீன் விடுதிகள், கடற்கரைக் களிப்பிடங்கள், சுற்றுலாத்தளங்கள் போன்றவை மேம்படுத்தப்பட உள்ளன. இவை உண்மையிலேயே அடித்தட்டு மக்களுக்கு நன்மையைக் கொண்டுவருமா? என்பது ஒரு மாபெரும் கேள்வி. முன்பு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் கட்டமைக்கப்பட்ட தொடர்வண்டித் தடங்கள், கப்பல் போக்குவரத்துக்கள், மெக்காலே கல்விச் சாலைகள் யாவும் இங்கிருந்து வரியை தண்டல் செய்து அனுப்புவதற்கும் மூலப்பொருள்களை பொதிவு செய்து கடத்துவதற்குமே பெரிதும் பயன்பட்டுள்ளது என்று இங்கிலாந்து நாட்டு அறிஞர் அர்னால்டு என்பவர் விளக்கமாக தனது நூல் ஒன்றில் குறிப்பிடுகின்றார். எனவே ஒரே ஒரு, கம்பெனி வந்தே இப்படி நடந்தது என்றால், பல்லாயிரக்கணக்கான பன்னாட்டு நிறுவனங்கள் வருவதும், அவை நடமாடவும், உரையாடவும் உறவாடவும் வாய்ப்பாக கட்டுமானங்களை ஏற்படுத்துவதும் எதற்கு என்ற கேள்வி மீண்டும் எழுகிறது.

அகவமைப்புகள் இந்தியச் சிற்றூர்களில் உள்ள ஏரிகளையும்,

குளங்களையும் ஆழப்படுத்தல், அங்குள்ள விளைநிலங்களின் விளைப்புத்திறனை மீட்டுருவாக்கல், சமூகக் காடுகளைப் பெருக்குதல் போன்ற செயல்களாகத்தான் இருக்க முடியும். அதுதான் அவர்களுக்கு நிலைத்த நீடித்த வாழ்வைத் தரமுடியும். ஆனால் இன்றைய கட்டுமானத் திட்டங்களும் அதற்கான முதலீடுகளும் வேறு வகையில் உள்ளன.

இப்போது நாம் மூன்று சொல்லாக்கங்களைப் பிரித்துப்பார்க்க வேண்டியுள்ளது, அவை Growth, Development, Sustainable Development, ஆகியனவாகும். அதாவது வளர்ச்சி, மேம்பாடு, நிலைத்த அல்லது நீடித்த மேம்பாடு, வளர்ச்சி என்பது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அது ஒரு சமூகத்திற்கு நன்மை தருவதாகவும் இருக்கலாம் அல்லது தீமை தருவதாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக பயிர்களின் வளர்ச்சி, என்றும், நோயின் வளர்ச்சி என்றும் கூறலாம். இரண்டும் வளர்ச்சிதான். மேம்பாடு என்ற சொல் நல்லவகை வளர்ச்சியை மட்டும் குறிப்பது. ஆனால் இதில் தளப்பார்வை இருக்கும். காலப்பார்வை இருக்காது. அதாவது மக்கள் மேம்பாடு என்று கூறினால் அது பொருளாதார மேம்பாடு என்பது மட்டுமல்ல. பண்பாட்டு, சமூக அரசியல் மேம்பாடு என்பதோடு தொடர்பு கொண்டது. அந்த மேம்பாடு என்பது நீண்ட நெடுங்காலமாகவும், தற்போதைய தலைமுறைகளுக்கு நன்மை செய்வதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத் தலைமுறைகளின் வாழ்வை சீர்குலைக்காத வகையிலும் இருக்குமானால் அது நிலைத்த மேம்பாடு என்று கருதப்படும்.

இந்தச் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு நாம் Development Video என்ற கருத்தைப் பார்க்க வேண்டும். மேம்பாட்டு ஒலிப்பேழை என்பது செய்தித் தொடர்பு உலகில் இப்போதுள்ள மிக அண்மைய முன்னேற்றப் படியாகும். இன்று கணிப்பொறிகளின் பெருக்கம் எப்படி வணிகத்துறையில் விரிவடைந்து வருகிறதோ அதேபோல பண்பாட்டுத் தளத்தில் காட்சிப் பேழைகளின் பெருக்கம் விரிவடைந்து வருகிறது. நாம் ஏற்கனவே பார்த்தது போல் பண்பாட்டுத் தளத்தை இரண்டு பெரும்பூதங்கள் கைப்பற்றியுள்ளன. அவை தொடர்ந்து மக்களை மலினப்படுத்தும் போக்கை கைக்கொண்டு வருகின்றன. இன்று தொலைக்காட்சித் துறைகள் அரசுத் துறையாக இருப்பினும், தனியார் துறையில் இருப்பினும் வணிக நோக்கோடுதான் செய்திகளைத் தந்து வருகின்றன. வணிகம் தவிர்த்த எந்த பண்பாட்டுச் செய்திகளும் இருக்க முடியாது என்ற சூழல் உருவாகி விட்டது. செய்திகள் கூட விளம்பரங்களின் தாங்குதலில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன.

எப்பொழுதுமே ஒரு செய்தித்தொடர்பில் அல்லது ஒரு படைப்பில் இரண்டு அடிப்படைக் கூறுகள் இருக்கும் என்பது அறிஞர்களின் கூற்று. பலராலும் ஏற்கப்படும் கருத்தும் இதுவே. அதை உருவம், உள்ளடக்கம் என்று பிரிப்பார்கள் (Content & Form) இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்திசைவானதாக இருக்கும். பல நேரங்களில் உள்ளடக்கமே உருவத்தை தீர்மானிக்கவும் செய்யும். ஆனால் உள்ளடக்கமே அற்ற உருவம் நிலைத்திருப்பது கடினம். அல்லது பொருந்தாத உள்ளடக்கம் உருவத்தைக் கொடுப்பதோடு மட்டுமின்றி மக்களுக்கு எவ்விதப் பயனும் தராது. இதை வள்ளுவரும் ஓரிடத்தில் குறிக்கின்றார்.

இயைபு என்ற உள்ளடக்கம் இல்லாத பண் என்ற வடிவம் கொண்ட பாடல் இருந்தும் என்ன பயன்? அதைப்போல கண்ணோட்டம் அதாவது இரக்கம் பரிவுணர்ச்சி என்ற உள்ளடக்கம் இல்லாத கண் என்னும் உருவம் இருந்து

என்ன பயன்? என்கிறார்.

பண் என்னாம் பாடற்கு இயைபு இன்றேல் கண் என்னாம்
கண்ணோட்டம் இல்லாதகண். (பொருள் : கண்ணோட்டம்:573)

என்று கூறுகிறார்.

இயைபு என்பது உள்ளடக்கத்தை அதாவது contentஐக் குறிப்பது. ஆக, உள்ளடக்கம் என்பது மிகக் கட்டாயமான ஒன்றாகிறது. ஆனால் இந்த உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பவர்கள் யார்? ஏற்கனவே நாம் பார்த்தது போல பொருளியல் கட்டமைப்புகளின் வழியாக பண்பாட்டுத் தளத்தைப்பிடித்து வைத்துள்ளவர்களே உள்ளடக்கத்தை தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள். இப்போதைய அறிவியல், நுட்பவியல் யாவுமே அப்படிப்பட்டவர்களின் கையிலேயே இருப்பதால் அந்த நுட்பவியல் கருவிகளும் மக்களிடம் இருந்து அயன்மைப்பட்டுக் கிடக்கின்றன. அதே சமயம் அந்தக் கருவிகள் மக்களை பெரிதும் ஆளுமை செய்கின்றன.

வரலாற்றுப் பார்வையில் பார்த்தோமானால் கூத்து, நாடகம் திரைப்படம், தொலைக்காட்சி என்ற அரங்கங்களின் வளர்ச்சியானது சென்றடையும் மக்கள் பரப்பை கூடுதலாக்கிக் கொண்டே வந்துள்ளன. கூத்து என்பது நூற்றுக்கணக்கான மக்களையும், தொலைக்காட்சி கோடிக்கணக்கான மக்களையும் நேரடியாகச் சென்றடைய முடிந்திருக்கிறது. ஆக இவ்வளவு பரந்த விரிந்த ஆற்றல்மிக்க ஒரு கருவி மக்களுக்காக எப்படி இருக்க வேண்டும்? அல்லது மக்கள் பணியாளர்களாகிய நாம் எப்படிக் கையாள வேண்டும் என்பது நமக்கு முன்னுள்ள கேள்வி. இப்போது நாம் ஒரு சிலவற்றை பட்டியலிட முடியும். இந்தப் பட்டியல் ஒரு எடுத்துக்காட்டு தான், விரிவானது அல்ல.

**செய்தித் தொடர்புக் கருவிகளால் தற்போது கொடுக்கப்படுபவை** :

பங்குச் சந்தைச் செய்திகள், ஏற்றுமதி இறக்குமதிச் செய்திகள், விலங்குகளோடு கொஞ்சுவது, வண்ணப்பறவைகளை கொஞ்சுவது மேனாமினுக்கி அரசியலாளர்கள், முரண்பட்ட தலைவர்கள் அவர்களின் வாய்ச்சண்டை, திரைப்பட நடிகர்களின் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள், கலைஇலக்கியங்களில் ஒற்றைச் சார்புடையவர்களின் குரல், நடைமுறைக்கு தொடர்பற்ற வல்லபடி வழக்குகள், அருவருப்பு ஆட்டங்கள் போன்றவை

**செய்தித் தொடர்புக் கருவிகளால் தற்போது மறைக்கப்படுபவை :**

உழவர்களின் நிலை, அவர்களது வறுமை, சந்தையில் அவர்கள் சூறையாடப்படுதல், நர்மதா அணையில் துரத்தப்பட்டவர்கள், போபால் நச்சுபுகைக்கு காரணமானவர்கள், உண்மையான அரசியல் தலைவர்கள் மக்களின் ஞாயமான போராட்டங்கள், ஆழமான கலை இலக்கிய உரைவீச்சுகள், நடைமுறையில் உள்ள சிக்கல்களை படம் பிடித்துக் காட்டும் படைப்புக்கள், மக்களை மேல் நிலைக்கு உயர்த்துவதான கலைகள், அடித்தட்டு மக்களின் உண்மையான கலைவடிவங்கள் போன்றவை.

எனவே நாம் Development Video என்ற தலைப்பில் சிந்திக்கும்போது அடித்தட்டு மக்களை மேம்படுத்துகின்றதும், பன்மயத் தன்மை கொண்ட கருத்துக்களை எதிரொளிக்கின்றதும், தனித்தன்மை கொண்ட மக்களின் அடையாளங்களை நிலைநிறுத்துகின்றதுமான ஒரு காட்சி அரங்கம் உருவாகுமேயானால் அது மக்களை மேம்படுத்தும்.

(மேம்பாட்டு ஒளிப்பேழைகளுக்கான கூட்டமைப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

www.padippakam.com

## எச எழுத்து

மதியின் கடிதக்கதையின் பெண்ணியல் நோக்கு சிரமமின்றி எளிதாகவும், தத்தம் குடும்பத்திற்குள் நேர்ந்து வருகிற உரையாகவும் இருந்தது. கவிதைகள் மெல்ல மெல்ல பலம் பெற்று எழ முயற்சிக்கின்றன. மக்கள் நோக்கில் உங்கள் பயணம் மற்றும் விரிவாக்கங்கள், அவதானிப்புகள் யாவும் ஒரு சில இதழ்கள் மூலம் கனம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

யவனிகா ஸ்ரீராம்,
திண்டுக்கல்.

ஒண்டிவீரன் குலத் தெய்வமாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால், வரலாற்றுப் பதிவுகளில் அருந்ததியர் இனத்தில் பிறந்த ஒண்டிப்பகடை சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாக நெற்கட்டுஞ்செவலை ஆண்டு வந்த புலித்தேவனுடைய ஒற்றர் படைத் தளபதியாக அவர் பணியாற்றியிருக்கிறார். ஒரு முறை பணியிலிருந்த போது தான் ஒரு கையை இழந்து "ஒண்டி வீரன்" என்னும் பெயர் பெற்றதாக அறியப்படுகிறது.

கன்னட மொழி பேசும் அருந்ததியர் தங்களது மணவிழாக்களில் ஒண்மை தொட்டராயன் (தொட்ட-பெரிய) என்ற தெய்வத்தை வணங்குகிறார்கள். அவர் ஒரு குழுத்தலைவனாக அச்சப்பனைப் போல் வாழ்ந்து மறைந்திருக்கலாம். மேலும் மதுரை வீரன் இன்றைய குலதெய்வம் அன்றைய நாளில் உயர் சாதிப் பெண்ணான பொம்மியை மணமுடித்து விளைவாக மாறுகால் மாறுகை தண்டனையால் உயிரிழந்தவர்.

கவிதைகள் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பது நன்று
சாதி அதிகாரத்தின் பத்து குறள்கள் சிந்தனையைத் தூண்டுகிறது.

அ.நாராயணன்
விருதுநகர்

வாமன வடிவம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. நன்று. குழந்தைத் தொழிலாளர் குறித்த கட்டுரை பயனுள்ளது. எல்லைத் தமிழனின் காலம் வரும் அப்போது நரித்தந்திரங்கள் காணாமல் போகும்.

தி.மா.சரவணன்,
திருச்சி

பொதுவாக கவிதை, கதை, ஹைக்கூ என்று ஒரே வட்டத்திற்குள் தான் சிற்றிதழ்கள் அமையும் என்ற மக்களின் எண்ணத்தை மாற்றி சிற்றிதழ்களும் சமுதாய பிரச்சினைகளை முழுமையாக வெளியிட முடியும் என்ற உயர் குரலுடன் கதவு வெளிவந்துள்ளது.

செ.கோவிந்தராசன்
திருச்சி.

கட்டுரைகளும் கவிதைகளும் மனித வாழ்க்கையின் யதார்த்தத்தை சிறப்பாகக் கூறுகின்றன. அம்மா கடிதம் வெகுவாக என்னைக் கவர்ந்தது. அனைவரும் படிக்க வேண்டிய அற்புதக் கடிதம்.

வி.எஸ். வாசன்
காரியாபட்டி.

அம்மாவிற்கு மதி வரைந்த கடிதம் பெண்களின் நிலையை சுட்டிக்காட்டியது.

ஹெப்சி ஜவஹர்
மதுரை

படிப்பகம்

www.padippakam.com

நீ புறக்கணித்தென்னை
தூக்கியெறிந்த இடம்
இலந்தை முட்களர்ந்த
இடுகாட்டுப் பிணங்களின் கழிவுக் குழி.

மௌனத்தை கொல்கிற ஆவேசத்தோடு
மண்டையோடுகள் சிரிக்க
அழுகி நாற்றமடிக்கும் பிணக்கழிவில்
முட்கள் கிழித்து குருதி கசியுமென்
உடம்பைத் துடைத்தபடி
வழுக்கி வழுக்கி வீழ்ந்து
மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு வேளை
நான் உயிர்பிழைத் தெழுந்து வந்தால்
உன் கூரிய நகங்களால்
என் இதயத்தைக் கிழித்து
துஷ்ட தேவதைகளுக்கு பலியிடு
ஒரு சூனியக்காரியைப் போல.

இல்லை
உன் வலுவெல்லாம் திரட்டி
மூளை சிதற என் கவாலத்தை உடைத்தெறி
என் கதியை எல்லோரும்
எப்போதும் நினைத்திருக்கும் படி.

மண்டையோடு சிதைத்த
என் பிணத்தின் மீது கால் வைத்து
மயானத்தில் ஒளித்திருக்கிற
பேய்களும், பிசாசுகளும்
பயந்து நடுங்கியோட கூக்குரலிட்டு
இனி
நேசத்தை சொல்கிறவர்களின்
நாக்குகள் அறுக்கப்படுமென.

- க. விவேகானந்தன்.

●

## பெரும்பசி

யுகப் பசியெடுத்துத்
திரிந்து கொண்டிருந்தது நாய்
அடி வயிற்றிலிருந்து கிளம்பிய
ஓலம் தாங்காது
பிரளயப் பசியில்

படிப்பகம்

தன் பின்னுடலைக்
கடித்துப் பார்த்தும்
வராத போது
ஆத்திரப்பட்டு
வான விளிம்பில் போய்
முட்டிக் கொண்டது
சூரியன் மேல்
சிறுநீர் கழித்து விட்டு
ஓடிய நாயின் பற்கள்
நிலாவை மண்ணில் போட்டு
புரட்டிப் புரட்டி
இழுத்துப் பார்த்தது.
காணச் சகிக்காத கடவுள்
ஆதாமின் விலா எலும்பெடுத்து
தூக்கிப் போட்டார்
நாய் கடித்துக் குதற.

-சுகுணா

●

## புதிய ஏற்பாடு

நெடுநாள் முன் நிகழ்ந்த
புத்தரின் புன்னகைக்குத்
தாமதமாகவே
"சக்தி" யிடமிருந்து சமிக்ஞை
கிடைத்தது.
பொக்ரான் அதிர்ச்சியில்
வாஷிங்டனில் தொங்கிய
ஏசுவின் சிலுவை விரிசலுற்றது.
கோபமுற்ற ஏசு
இந்தியாவை இழுத்து வந்து
சிலுவையிலிட்டார்.
மோனிகாவின் கண்ணடிப்பால்
கலைந்து போன தவம்
சாபமாய் மாறிப்
போய் விழுந்தது சூடானில்
தெறித்து விழுந்த சாபத்தின்
துகள்கள் கம்யூனிஸ்ட்களின்
கண்களை உறுத்தி
அவர்களால் காண
இயலவில்லை
அருகில் கிடந்த
செம்மணிக் குழிகளை.

-சுகுணா.

## ஓய்வு நேரக் கவிதை

கால் தடங்கள் நகர நகர
நாளும் நாட்களும்
செல்ல
செல்ல
வாழ்தலின் ஒவ்வொரு நிமிஷத்திலும்
வழிபார்த்தல் இல்லை.
விழி நோக்கில் வெறுமை எல்லை
அவசரக் கால் ஏவல்களில்
கேசாதிபாதம் பழகிவிட்டது
கண்களின் நிலைகுத்தலும்
வெற்றிடம் வெறிப்பதும்
ஏற்றுக் கொள்ளப்பட்டன.
உப்பு சுவை மறந்து
மரத்துப் போன இரத்த
நாளங்களில் தெரிவதில்லை
துல்யமான மழை நீர் ருசி.
எனக்கும் ஆசை தான்
அடர்ந்த கொடிநிழல் கீழ்
அசைபோட்டுக் கொண்டிருக்கும்
ஆடாகவோ
பாதித் துக்கப் பசுவாகவோ
ஆகிவிட
எனக்கும் இணக்கம்தான்
கண்களில் அள்ளிக் கொள்ள
ஆகாய நியான் விளக்கு
ஆற்றில் எதிரொலித்துச் சிதறித்தரும்
நட்சத்திரங்களை...
எனக்கும் ஏக்கம் தான்
எப்போதோ காட்டுப் பொந்திடை
ஒளித்துச் சென்ற முந்திரியை
கண்டெடுக்கும் .
முயல் முயற்சியில் ஓடிவிட...
ஆதங்கம் தான் எனக்கும் அழகே..
உன்னை
ஆசு கவிகள் பலர் போல
ஆளுயரமாய்
நின்று நோக்க
அடி வருடி ஆட
உன்
விழி வழி யாய் புன்னகை
விகசிப்பில் மட்டுமே

www.padippakam.com

உயிர் வாழ
வாழ்தலை உற்று நோக்க....
ஆயினும்
கால்களுக்கடியில்.... வாழ்தலை
தொலைத்துவிட்டு
கடிகார முட்களாய் வாழ்கிறேன்
போலும்.

- ரெங்கா

## காடு

மரங்களின் மௌன வெளியில்
பாலைவனம்போல் படுத்திருக்கும்
செங்கல் நிற சாயங்கால வானம்

காடெங்கும்
கிழவனின் சோகமும்
மழலையின் பட்டாம்பூச்சி மகிழ்ச்சியும்
தவம் செய்பவனின் ஆசையற்ற ஒலியாய்
அகண்ட வெளியைக் கவ்விப் புகையெழுப்பும்

சப்தங்கள் விழுங்கப்பட்டு
படைக்கப்படாத உலகத்தின் பயத்தோடு
செடி முட்களிலும் விரிந்து கிடக்கும்
தனிமை குடித்த சோகம்

வழியற்ற வெளியில்
நரிகளும் காட்டுப் பன்றிகளும்
வயிறு கிள்ளும் பசியின் வலியோடு
மூச்சு அதிர ஏங்கித்திரியும் கொடூரத்தோடு..

அமைதியின் அண்மையில்
காட்டில் தனித்து நடக்கையில்
உள்ளுக்குள் வியர்வை விழ
ஓட்டம் பிடிக்கும் ஆன்மா..

வெளியில் சிரித்துக் கைதட்டி
வயிறு குலுங்க ஆனந்திக்கும் காடு
அவனைப் பற்றிய பயமில்லாமல்...!

பாலைநிலவன்

www.padippakam.com

## சதுரங்கம்

தாக்குவதோ பாதுகாப்பதோ
நோக்கங்களாக
நகர்வுகள் தீர்மானிக்கப்படுகிறது.

மீள் சக்தியற்று முன்னகருகிற
சேனைகளின் இரத்தம்
ராஜ்ஜியத்தின் மகுடங்களில்
தெறிக்கும்

தாக்கும் தருமங்கள்
கைவிடப்பட்டு வெகுநாளாயின.
இருந்தும்
கட்டாயப்படுத்தப்படுகிறது
சதுரங்க விதிகளும்
நகர்வின் வரம்புகளும்

எதிரி யாரென்று தெரியாமலே
சதுரங்கக் கட்டங்களாகி வருகிறது
நிற்குமிடங்கள்.

- செல்மா ப்ரியதர்ஸன்.

●

வேலிக்கு வெளியே
தலை நீட்டும் பூ சொல்லும்
விடுதலை விடுதலை

❋

உரிக்க உரிக்க வரும்
வெங்காயம்
வரிவரியாய் பட்ஜெட்

❋

எனக்கான அவளின் செய்தி
பாதிவழியில் தங்கியதோ
தந்திக் கம்பியில் குருவிக் கூட்டம்

❋

அசையாமல் நிற்கும் மரம்
ராகங்கள் கேட்குமோ
கிளையில் குயில் பாட்டு

❋

முடியாது என்னால்
ஒத்தையாய் திரும்ப
கண்ணாடிக்குள் சிரிக்கும் பொம்மை.

- அழகுபாரதி

www.padippakam.com

# இன்றைய கவிதை

-விக்ரமாதித்யன்

இன்றைய வாழ்க்கை
இன்றைய உலகம்
இன்றைய மனிதர்களால்
ஆனது, இன்றைய கவிதை.

இவை / இவர்கள் எவற்றால் ஆனவர்கள். இன்றைய அரசியல், சமூகம், பொருளாதாரம், அறிவியல், தொழில் நுட்பம், சுற்றுச் சூழல் இப்படி சூரியனுக்குக் கீழுள்ள எல்லாவற்றாலும் ஆனவை / ஆனவர்கள்.

எல்லாமே மாறுகின்றன என்கிறபடி இவற்றால் / இவர்களால் ஆன கவிதையும் மாறுகிறது. இதுதான் இன்றைய கவிதையாகி நிற்கிறது. மதிப்பீடுகள் மாறிவிட்டன என்கிறோம். காலம் மாறிப்போயிற்று என்கிறோம். மேலோட்டமாகப் பார்த்தாலே தெரியும் பத்திருபது வருஷத்தில் இந்த நாள் எப்படியெல்லாம் மாறியிருக்கிறது. நகர்மயமாதலும் தொழில் மயமாதலும் நம் நகரங்களின் முகத்தை எவ்வளவு மாற்றிப் போட்டிருக்கிறது.

நிலம் சார்ந்த வாழ்க்கை மாறிவந்திருப்பதில் ஊர் பெயர்தல் சாதாரணமாகி விட்டிருக்கிறது. முப்பது வயதில் திருமணம் என்கிறது இயல்பானது போலாகி விட்டது.

உறவுகள் வந்து திரும்புகிறவையாக மாறி வெகு காலம் ஆகி விட்டது. பணமே பிரதானம் என்பது போல ஒரு மனோபாவம் குடிகொள்ளத் தலைப்பட்டு விட்டது.

மனித விழுமியம்
அறம்
உண்மை என்பதெல்லாம் எந்த அளவுக்கு நடைமுறையில் கைக்கொள்வது என்பதாகியிருக்கிறது.

நுகர்பொருள் கலாசாரம் மேலோங்கி நுண்ணுணர்வுகள் நசிப்பிக்கப்படுகின்றன.
அன்பு, பரிசு, அமைதி, மேன்மை என்பதெல்லாம் அருகி வருகின்றன.
கவிஞன் கவலைகொள்கிறான்
கவிதையில் பகிர்ந்து கொள்கிறான் / பதிந்து வைக்கிறான்.
இன்னொரு பக்கம்
அன்பு, ஆசை, கோபம், சாந்தம் - இதுபோல உணர்வுகளைக் கொண்டவர்கள் மனிதர்கள் இவற்றால் ஆனது வாழ்க்கை.

இந்த உணர்வுகளின் வழியே ஆளப்படுகிற உலகம். இம்மனிதர்களின் மன உணர்வுகளின் வெளிப்பாடு கவிதை.

அனுபவங்களால் ஆன மனிதர்களின் பகிர்தல் கவிதை கலை இலக்கியம் எல்லாமும் இன்னமும் அன்பு செலுத்துகிறோம்
அன்புக்கு ஏங்குகிறோம்.
இன்னும் இன்னுமென்று உயர்ந்த விஷயங்களில் ஈடுபாடு காட்டுகிறோம்.
விழுமியங்களில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். சார்ந்திருக்கிறோம்.
உயிர் இயல்பு இது.
அழியாமல் இருந்து கொண்டிருக்கிறது. மெல்லுணர்வு காதலும் கருணையும் இன்றும் பச்சையம் மாறாமல் எங்கெங்கோ இருந்து கொண்டு தான் இருக்கிறது.

www.padippakam.com

குழந்தைமையும் பெண்மையும் மாமருந்து போல மானுடத்தின் அழகாக உயிர்ப்போடு நம்மையெல்லாம் வாழ வைத்துக் கொண்டு தான் இருக்கிறது.
தாய்மையும் பரிவும் முடிந்த அளவுக்கு ஈரமாகவே இருக்கிறது.
சகமனுஷனிடம் காட்டும் நேசம் பட்டுப் போய்விடாமல் இருக்கிறது.
சொல்லும் பொருளும் போல, மனிதனிடமிருந்து உணர்வைப் பிரித்துவிட முடியாது என்றே சொல்ல வேண்டும்.
ஆதி உணர்வுகளை அவ்வளவு சுலபமாய் அழித்து விட முடியுமா என்ன?
(28-3-1999ல் கருத்தாளர்வட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்)

●

## அ. நித்யம்

-மதி கண்ணன்

இந்த நகரத்துல இதுதான் கொஞ்சம் பெரிய மருத்துவமனை. மூச்சுத் திணறலால சிரமப்பட்ட என் அம்மாவை இங்க சேர்த்து ஆறு நாள் ஆச்சு இன்னும் மூணு நாளாவது இருக்க வேண்டி இருக்கும். அம்மாவுக்கு தூக்க ஊசி போட்டு தூங்க வச்சிருக்காங்க. ஆறு நாளாவே இப்படித்தான். முதல் நாள் தூக்கத்துக்கும் சாவுக்கும் வேறுபாடு தெரியாமல் நான் பட்டபாடு. அடிக்கடி நர்சக் கூப்பிட்டு அம்மாவுக்கு உயிர் இருக்கிறதுன்னு உறுதிப்படுத்திக்கிட்டேன். இப்ப எல்லாம் பழகிப் போச்சு. அம்மா தூங்கட்டும். கொஞ்ச நேரம் இந்த மருந்து வாடையிலிருந்து தப்பிச்சு ஒரு புகை பிடிக்கலாம். மறக்காமல் நர்சிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்தேன்.

டாக்டரம்மா வெளியிலிருந்து உள்ளே வந்தார்கள். மிக மரியாதையாக ஒதுங்கி வழிவிட்டேன். வெளி நோயாளிகளைப் பார்க்கிற நேரம் தான் இது. அதனால நாம வெளியே போகலாம். நீண்ட வரிசை கையில் சதுரர அட்டைகளுடன். சில டாக்டர்கள் சும்மா உட்கார்ந்திருக்கும் போது இங்க மட்டும் ஏன் இவ்வளவு கூட்டம். மருத்துவமனை எதிரில் வந்து சிகரெட் பத்த வைத்து நிமிர்ந்தேன். மருத்துவமனையின் பெயர்ப்பலகை. டாக்டர் பவானி ஸ்ரீ நிவாஸ் என்று எழுதி பின்னால் ஏறக்குறைய எல்லா ஆங்கில எழுத்துக்களையும் மாற்றி மாற்றிப் போட்டு டாக்டரின் படிப்பைச் சொன்னது. எனக்குள் சிரித்துக் கொண்டேன். எனக்குப் பொருள் விளங்காத இந்த எழுத்துக்களைப் பார்த்துத் தானே பெரிய டாக்டர், நல்லா பாப்பாங்க என்று நம்பி அம்மாவ இங்க சேர்த்தேன். என் நியதி தானே மற்றவர்களுக்கும்.

ஒரு கார் வந்து நின்றது. ஒரு பெண் கையில் குழந்தையுடன் இறங்க ஒரு வயதான அம்மா இன்னொரு குழந்தையுடன் இறங்கினார்கள். அம்மாவை சேர்த்த அன்றைக்கு மாலைதான் இரட்டைக் குழந்தை பெற்ற இந்தப் பெண் மருத்துவமனையை காலி செய்தார். நினைவிருக்கிறது. அந்தப் பெரியம்மா என்னைப் பார்த்து நட்பாய் ஒரு சிரிப்பு சிரித்தார்கள். அவர்களுக்கும் நினைவு இருக்கிறது போலும். நானும் சிரித்து வைத்தேன் சிகரெட்டை மறைத்த படி.

காரில் வந்தவர்கள் நேரே டாக்டரம்மாவைப் பார்க்கப் போனார்கள். கூட்டம் சலசலத்தது. "அவுங்க போன்ல அப்பாயின்ட்மென்ட் வாங்கியிருக்காங்க" நர்சின் சரிக்கட்டல். அதற்கும் கூட்டம் வார்த்தைகளின் முழு அர்த்தம் புரிந்து விடாதபடி கவனமாய் சலசலத்தது. நர்ஸ் அவசரமாய் வெளியில் வர அம்மா

படிப்பகம்

www.padippakam.com

எந்திரிச்சிட்டாங்களா? என்றேன் "தூங்குறாங்க. எந்திரிக்க இன்னும் ரெண்டு மணி நேரமாகும். ஓட்டத்துடன் பதில் கூறி பக்கத்து மருந்துக் கடையில் ஏதோ மருந்து வாங்கிக் கொண்டு அதே விரைவில் உள்ளே போனார்கள். பாவம் இந்த நர்சுகளுக்கெல்லாம் வெறும் எண்ணூறு ரூபாய் தான் சம்பளமாம் போகும் போது ஆறு பேருக்கும் ஏதாவத பணம் குடுத்துட்டுப் போகணும்.

காரில் வந்தவர்கள் காரில் ஏறி புறப்பட்டார்கள். மீண்டும் ஒரு சிகரெட்டை பற்ற வைத்தேன். "என்னப் பெத்த ராசா இங்க பாருடா. ஆஸ்பத்திரி இந்தா வந்துருச்சுடா. கண்ணா முழிச்சுப் பாருடா" நாலு வயதுள்ள குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஏழெட்டுப் பேர். ஓடி வந்தார்கள். "அம்மா தாயி. அம்மாவப் பாக்கணும்மா. ஏம்புள்ளயக் காப்பத்தணும்மா." நர்சிடம் முறையிட "கொஞ்சம் பொறுங்க சத்தம் போடாதீங்க. என்ற நர்ஸ் குழந்தையைத் தொட்டு கை பிடித்து கண் திறந்து பார்த்து விட்டு டாக்டரின் அறைக்குச் செல்ல கூட்டம் "என்னம்மா உள்ள போகலாமா?" என்றது. கொஞ்சம் இருக்கும்டி கை காட்டி சென்ற நர்ஸ் டாக்டரை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார். டாக்டரம்மாவைப் பார்த்ததும் கூட்டம் மீண்டும் சப்தமாய் முறையிட்டது. குழந்தையை சோதனை செய்த டாக்டர் "கொஞ்சம் முன்னாலேயே வந்திருக்கக்கூடாதா? என்று கேட்டு விட்டு தன் அறைக்குள் புகுந்து கொண்டார்கள். கூட்டம் நர்சைப் பிடித்துக் கொள்ள "குழந்தை இறந்துருச்சும்மா" என்றார். "ஐயோ" "ராசா" "மகனே" ஓலமாய் அனைவரும் அழுது புலம்பினர். நர்ஸ் பதட்டமாக "ஐயா அம்மா இங்க சத்தம் போடக் கூடாது. அழாதீங்க வீட்டுக்கு கொண்டு போங்க. ம்.ம்.. வெளிய போங்க." கூட்டம் அழுதபடி வெளியில் வந்தது. சிறிது நேரம் வெளியில் உட்கார்ந்து அழ நர்ஸ் வெளியில் வந்து "ஏம்மா எத்தனதடவம்மா சொல்றது இங்க உக்காந்து அழுகக் கூடாது" கூட்டம் ஓரளவு அமைதியாய் அழுதது.

நடுத்தர வயதுள்ள ஒரு ஆள் குழந்தையின் பிணத்தை வாங்கித் தோளில் போட்டுக் கொண்டு துண்டால் போர்த்தியபடி "கன்னியம்மா நீ மட்டும் அண்ணன் கூட வா பத்தரை பஸ்ஸிற்க்கு போவோம். மத்தவுங்க பதினோருமணி பஸ்ஸில வாங்க என்றார். கன்னியம்மா அழுதபடி" இல்லண்ணே எல்லாரு பத்தர பஸ்ஸிக்கே போயிடலாம் "என்றது. அனைவரும் மீண்டும் சத்தமாய் அழுதபடி எழுந்திரித்தனர். குழந்தை வைத்திருந்தவர் கோபமாக, "சீ... நிறுத்துங்க. ஒங்க பாசத்தையெல்லாம் ஊருல வந்து காட்டுங்க". என்றவர் கன்னியம்மாவிடம் "இதுகளயும் நம்மளோட கூட்டிட்டுப் போனா பஸ்ஸில அழுது புள்ள செத்துப் போனதக் காட்டிக்குடுத்துடுங்க. பொணத்த வண்[illegible]த மாட்டாங்க. காரு புடிச்சு போறதுக்கு ஆயிரம் ரூபாய்க்கி மேல [illegible] இருக்குற இருநூறு ரூபாயில ஆகுற காரியத்தப் பாக்கணும் [illegible] தூங்குற புள்ளய தூக்கின மாதிரி நா புள்ளய வச்சுகிறேன். அழுகாம என் கூட வா. பஸ்ஸில ஏம் பக்கத்துல நின்னுறாத பஸ்ஸில ஊருக்காரவுக பாத்து விவரம் கேட்டா. கண்ணனுக்குக் காய்ச்சல் ஊசி போட்டிருக்கு தூங்குறான்னு சொல்லிடு". அவரும் அழுதார். நிதானித்து பெருமூச்சு விட்டவர் துண்டால் முகத்தை துடைத்து விட்டு நீண்ட எட்டு வைத்து நடந்தார். பக்கத்து பேருந்து நிறுத்தம் நோக்கி

www.padippakam.com

RST

MEDIA DEVELOPER

M.S. CORNER
PANDALGUDI ROAD
ARUPPUKOTTAI - 626 101.
☎ 55791
saras9a@mdu.vsnl.net.in

Internet
&
Email service

Polytechnic &
College
Books Dealer.

படிப்பகம்

www.padippakam.com



விரைவில்....

# சிறுவர் இதழுக்கான அனைத்துக் குணங்களுடன் ஒரு - சிறுவர் இதழ்.

படைப்புகள்,

துணுக்குகள்

இதழுக்காக முன்மொழியும் பெய

கருத்துக்கள்,

அட்டைப் படத்திற்கான ஆலோச

பிறவிபரங்களுடன்

தொடர்பு கொள்ள :




கருத்தாளர் வட்டம்
5-36-4ஆ, பாரதி நக
மின்வாரிய குடியிருப்புகள் கி
அருப்புக்கோட்டை - 626
தொலைபேசி : 04566-733




889

PRINTED PERIODICAL

SAMAR
81 - RUE DE COLOMBES
92600 ASNIERES
SURSEINE
FRANCE.

5,36-48 பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள்(கிழக்கு)
அருப்புக்கோட்டை - 626 101.
✆ 04566 - 73322

படிப்பகம்